14.03.2025



<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.</u>

<u>அசல் வழக்கு எண்.25/2011</u>

<u>பி.வா.சா. 1–பாரத், த/பெ. முத்துகுமார்</u>

<u>சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது</u>

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

07. என்னுடைய அறிவுக்கு எட்டியவரை தாவா சொத்து ஆதியில் வசந்தா என்பவருக்கு பாத்தியப்பட்டது. அவருடைய கணவர் பெயர் தண்டபாணி. தண்டபாணி மனைவி வசந்தா என்பவர் பவர் கொடுத்துள்ளதாக கூறி தான் நடராஜன், ராஜேந்திரன் என்பவருக்கு கிரையம் செய்துள்ளார். நான் செந்தில்குமாரிடம் கிரையம் வாங்கினேன். நான் கிரையம் வாங்கும் போது செந்தில்குமார் பெயரில் உள்ள கிரையாவணத்தை நான் படித்து பார்த்தேன். அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.5 என்று சொன்னால் சரிதான்.

08. கண்ணம்மாள் என்பவர் சொந்த சொத்தாக கருதி தான் செந்தில்குமாருக்கு கிரையம் செய்து கொடுத்தார். பவர் ஆவணத்தின் மூலம் எழுதிக்கொடுக்கவில்லை. அதே ஆவணத்தில் வேறு சில சர்வே எண்களுக்கு பவர் மூலமும் கிரையம் செய்து கொடுத்துள்ளதாக சாட்சி கூறுகிறார். பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் கண்ணம்மாள்

தாவா சொத்து தன்னுடைய சொந்த சொத்து என்றும், வேறு சில சொத்துக்கள் தனக்கு பவர் மூலம் கிடைக்கப்பெற்று அவர் கிரையம் செய்து கொடுப்பதாக சொல்லியுள்ளார். பி.வா.சா.ஆ.5 ல் உள்ள தாவா சொத்தை தவிர வேறு சில சொத்துக்கள் யாருக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் அவருடைய பெயரும் வசந்தா தான். வசந்தா என்பவருடைய பவர் ஏஜெண்டாக தான் மற்றொரு வசந்தா செந்தில்குமாருக்கு எழுதிக்கொடுத்துள்ளார்.

09. பக்கத்து நிலத்துக்காரரான வசந்தாவின் கணவர் பெயர் சிவராஜ். மேற்கண்ட வசந்தா, மற்றொரு வசந்தாவுக்கு எழுதிக்கொடுத்த பவர் பத்திரத்தில் வேறு சில சர்வே எண்கள் இருந்ததால் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை, தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். தண்டபாணி மனைவி வசந்தாவின் முகவரி சரியாக தெரியாது. மூல ஆவணத்தை படித்து பார்த்துள்ளேன், தற்போது எனக்கு வசந்தாவின் முகவரி ஞாபகத்திற்கு வரவில்லை. சிவராஜ் மனைவி வசந்தா என்பவர் முள்ளுகுறிச்சி ராசிபுரம், நாமக்கல் மாவட்டம் என்றால் சரிதான்.

10. செந்தில்குமாரிடம் 7, 8, 9 பிரதிவாதிகளாகிய நாங்கள் கிரையம் பேசினோம். பி.வா.சா.ஆ.2 ஆவணமானது 1997-2008 வரை பிரிவு 47 எ முத்திரை சட்டத்தின்படி நிலுவையில் இருந்து வந்தது என்று சொன்னால் அது பற்றி எனக்கு

தெரியாது. மேற்கண்ட ஆவணம் 1997–2008 வரை பிரிவு 47 எ–ன் கீழ் நிலுவையில் இருந்து வந்தது என்று சொன்னால் தெரியாது. பதிவுத்துறையில் பிரிவு 47 எ – ஆவணம் நிலுவையில் இருந்தால், அவை வில்லங்க சான்றிதழில் இடம் பெறாது என்ற விவரம் எனக்கு தெரியாது. பிரிவு 47 எ–ன் கீழ் உள்ள ஆவணம் முத்திரை கட்டணம் செலுத்துவது வரை வில்லங்க சான்றிதழில் இடம் பெறாது என்று சொன்னால் தெரியாது.

11. 06.11.1997 ம் தேதி வாதி கோபால் பத்திரம் எழுதும் போது 05.11.1997 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டதாக கூறும் பி.வா.சா.ஆ.2 வில்லங்க சான்றிதழில் குறிப்பு இல்லை என்று சொன்னால் என் தகப்பனார் வில்லங்க சான்றிதழில் பிரிவு 47 எ– ஆவணம் இருந்தாலும் இடம் பெறும் என்று சொன்னதாக சாட்சி கூறுகிறார். நீங்கள் சொல்லும் நடைமுறை 2005 வருடத்திற்கு பிறகு தான் வந்தது, 1997 வருடத்தில் நடைமுறை இல்லை என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 05.11.1997 ம் தேதியில் ஏற்பட்ட ஆவணத்தில் 07.11.1997 ம் தேதி ஆவணத்தில் வாசகத்தில் திருத்தம் ஏற்பட்டுள்ளதாக சார்பதிவாளர் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. தற்போது சாட்சி விவரம் தெரியவில்லை என்று கூறுகிறார்.

12. 1997ம் வருட காலத்தில் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணம் பதிவு செய்யும் நேரம் மாலை 4.30 மணி என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. உங்கள் தகப்பனார் ஆவண எழுத்தர் என்ற செல்வாக்கில் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தை 05.11.1997ம் தேதியில் மாலை 4.30 மணிக்கு உள்ளே கொடுத்தது போல் ஒரு பதிவை ஏற்படுத்தியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. தண்டபாணி மனைவி வசந்தா என்பவர் எவருக்கும் பவர் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் வசந்தா நடராஜனுக்கு பவர் கொடுத்திருந்தால் அந்த ஆவணத்தை தாக்கல் செய்திருப்பீர்கள் என்று சொன்னால் சரியல்ல. அந்த ஆவணத்தை தாக்கல் செய்தால் வசந்தா என்பவரின் கையொப்பத்தை மற்றொரு வசந்தாவின் கையொப்பத்துடன் ஒப்பீடு பார்க்க நேரிடும் என்றும், அப்போது உங்கள் மோசடி தெரியவரும் என்பதால் அந்த ஆவணத்தை நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

13. கலியன் குமாரர் செந்தில்குமார் யார் என்றால் நடராஜன் செந்தில்குமார் என்பவரிடம் அடமானம் வைத்தார் என்று நான் நினைக்கிறேன். வாதி கோபால் ஒரு மாத காலமாக தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்கு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்து சென்று கொண்டிருந்ததை உங்கள் தகப்பனார் அடமான

ஆவணத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. சாட்சி தன்னுடைய தகப்பனார் 1997 ம் வருடம் பத்திர எழுத்தர் இல்லை என்றும், மனு எழுதி கொடுத்து கொண்டு தான் இருந்தார் என்று கூறுகிறார்.

14. என்னுடைய தாத்தா பெயர் ராமசாமி. ஆர். முத்துகுமார் என்றால் என்னுடைய தகப்பனார் தான். 1997 ம் வருடத்தில் உங்கள் தகப்பனார் ஆவண எழுத்தர் இல்லை என்று கூறுவது பச்சபொய் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ல் பத்திர எழுத்தராக என்னுடைய தகப்பனார் பெயர் தான் உள்ளது. தற்போது சாட்சி தன்னுடைய தகப்பனார் 1997 ம் வருடத்தில் உரிமை பெற்ற பத்திர எழுத்தர் தான் என்று கூறுகிறார். பி.வா.சா.ஆ.1 புகழாக ஈட்டுக்கடன் பத்திரம் என்பதால் தான் அந்த ஆவணத்தை உங்கள் தகப்பனார் எழுதியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஈட்டுக்கடன் பத்திரம் மோசடியாக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றும், பி.வா.சா.ஆ.1 காலத்திலும் வசந்தா நடராஜன்பிள்ளைக்கு பவர் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

15. இதே வழக்கு சம்மந்தமாக என்னுடைய தகப்பனார் அ.வ.எண்.46/2008 வழக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். மேற்கண்ட அ.வ.எண்.46/2008 வழக்கின் இறுதி முடிவு என்னவென்றால் ஒருதலைபட்ச தீர்ப்பாணை ஏற்பட்டதாக

சாட்சி கூறுகிறார். நீங்கள் சொல்வது தவறு, ஒருதலைபட்ச தீர்ப்பாணை ரத்து செய்யப்பட்டு, விசாரணைக்கு பின்பு அ.வ.எண்.46/2008 தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அதற்கான ஆவணமாக வாதி தரப்பில் பதிவேடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், நீங்கள் ஒருதலைபட்ச தீர்ப்பாணை ஏற்பட்டதாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. அ.வ.எண்.46/2008 வழக்கின் படி ராஜேந்திரன் பை பவர் ஏஜெண்ட் முத்துக்குமார் என்பவருக்கு பாத்தியப்பட்டதாக கூறி கண்ணம்மாளுக்கு எழுதிக்கொடுத்துள்ளது செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

16. தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்பதால் வேறு யாரும் வாங்குவதற்கு தயாராக இல்லை என்பதால், ராஜேந்திரன் என்பவருக்காக முத்துக்குமார் வாதிக்கு எதிராக ஒரு வழக்கை தாக்கல் செய்தார் என்றால் அ.வ.எண்.46/2008 தாக்கல் செய்தது உண்மை என்று சாட்சி கூறுகிறார். அந்த வழக்கில் உங்கள் தகப்பனாருக்காக காலமான வழக்கறிஞர் வடிவேல் என்றால் ஞாபகமில்லை. அந்த வழக்கில் இந்த வழக்கில் வாதி எந்த வழக்கறிஞர் மூலம் வழக்கை எதிர்த்து நடத்தி வந்தார் என்று எனக்கு தெரியாது. வழக்கறிஞர் சுந்தரம் என்பவர் மூலம் வாதிக்கு அந்த வழக்கில் ஆஜராகி வந்தார் என்றால் தெரியாது.

மேற்கண்ட வழக்கறிஞர் வடிவேல் என்பவர் வழக்கறிஞர் சுந்தரம் என்பவரின் ஜூனியர் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

17. ஆனால் மேற்கண்ட வழக்கறிஞர் சுந்தரம் மற்றும் வடிவேல் ஆகியோர்கள் ஒரு Understanding–ல் இருந்ததாக சாட்சி கூறுகிறார். மேற்கண்டவாறு ஒரு Understanding–ல் இருந்ததால் தான் வாதி கோபால் அந்த வழக்கில் வழக்கறிஞர் சுந்தரம் என்பவருக்கு வக்காலத்து கொடுத்து, அதை அவர் தாக்கல் செய்யாததால் ஒருதலைபட்ச உத்தரவு ஏற்பட்டது என்று சொன்னால் அது பற்றி தெரியாது. அந்த விவரம் தெரிந்த பிறகு தான் இந்த வழக்கில் வாதி கோபால் ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்வதற்கு, இடைக்கால மனு எண்.363/2008 மனு கொடுத்து அம்மனு 06.09.2008 ம் தேதி அனுமதிக்கப்பட்டு ஒருதலைபட்ச தீர்ப்பாணை ரத்து செய்யப்பட்டது என்று சொன்னால் என்னுடைய தந்தையாருக்கு மேற்கண்ட விவரத்தை வழக்கறிஞர் வடிவேல் தெரிவிக்கவில்லை என்று சாட்சி கூறுகிறார்.

18. 29.10.2009 ம் தேதியில் உங்கள் தகப்பனார் வழக்கை நடத்த வராததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் என் அப்பாவிற்கு மேற்கண்ட விரவத்தை வழக்கறிஞர் தெரிவிக்காததால் தன்னுடைய தகப்பனார்

ஆஜராகவில்லை என்று கூறுகிறார். மேற்கண்ட விவரத்தை வாதி இந்த வழக்கை 2011ம் வருடத்தில் தாக்கல் செய்துள்ள நிலையில், தன்னுடைய வழக்குரையில் மேற்கண்ட விவரத்தை கூறியுள்ளார் என்று சொன்னால் சரிதான். மேற்கண்ட அ.வ.எண்.46/2008 வழக்கில் மீண்டும் கோப்பிற்கு எடுக்க உங்களுடைய தகப்பனார் உயிருடன் இருக்கும் வரையில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். அ.வ.எண்.46/2008 நிலுவையில் இருக்கும்போதே பி.வா.சா.ஆ.4, 5 ஆவணங்களை உடனுக்குடன் உங்கள் தகப்பனார் உண்மை தன்மை ஏற்படுத்துவதற்காக மேற்கண்ட ஆவணங்களை ஏற்படுத்தியுள்ளார் என்றால் தவறு.

19. தாவா சொத்து உங்களுக்கு பாத்தியப்பட்டதல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து மானாவாரி புன்செய் நிலம் என்றால் சரிதான். தாவா சொத்திற்குதற்போது வரை பட்டா வழங்கப்படவில்லை, வாதியின் கிரையம் தான் உண்மையானது என்பதால் தான் உங்களுக்கு பட்டா வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல, வழக்கு நிலுவையில் இருப்பதால் வழங்கப்படவில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அதாவது 2011க்கு முன்பு பட்டா ஏற்படவில்லை என்றால் சரிதான். கிரையம் வாங்கிய ராஜேந்திரன் பெயரில் பட்டா இருந்ததா

14.03.2025



என்றால் இல்லை. வசந்தா பெயரில் இருந்த பட்டா, வாதியின் பெயரில் மாற்றம் செய்யப்பட்டது இன்றுவரை இருந்து வருகிறது என்றால் சரிதான்.

20. என் பெயரில் வேறு எந்த விவகார பத்திரம் எதுவும் ஏற்படவில்லை. உங்கள் தகப்பனார் நடராஜன் பிள்ளைக்கு பவர் கொடுத்தாக கூறுவதும், நடராஜன்பிள்ளை, ராஜேந்திரனுக்கு வசந்தாவின் முகவராக கிரையம் செய்தது மோசடி என்றும், அந்த பத்திரமும் மோசடி என்பதால் அதற்கு பின்பு ஏற்பட்ட ஆவணங்கள் மோசடி என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தின் பாத்தியஸ்தர் வாதி தான் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து ராஜேந்திரன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்று நீதிமன்றம் விளம்புகை செய்யவில்லை என்பதால், ராஜேந்திரன் அதற்கு பின்பு ஏற்பட்ட அனைத்து கிரையாவணங்களும் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. மேற்கண்ட விவரம் தெரிந்த பிறகு தான், வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பு கிடைக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒம்/-திரு.இரா. சத்தியமூர்த்தி,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.